27th March 1961]

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : சாத்தனூர் டாமில் எத்தனை ஸ்டுடியோக்கள் வந்து படம் பிடிக்கிறது? டிமான்ட் எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. டிமான்ட் ஜாஸ்தியாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த 250 ரூபாய் என்பது படம் எடுப்பதற்கு மாத்திரமா? அல்லது வரக் கூடியவர்கள் தங்குவதற்காகக் கொடுக்கப்படும் கட்டணம் உட்படவா?

THE HON. SRI P. KAKKAN : ஒரு நாளைக்கு 250 ரூபாய் என்ற தகவல் இருக்கிறது. தங்குவதற்கு தனியாகத்தான் வாடகை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன். கட்டிடங்களில் தங்கினால் வாடகை கொடுக்கவேண்டும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியைப் பொருத்தவரையில் உதகைக்கு சினிமா படம் எடுக்க வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உதகைக்கு வரக்கூடியவர்களை வரவேற்கத்தான் நாங்கள் எப்போதுமே தயாராக இருக்கிறோமே. ஆகையால் அங்கு வருகின்றவர்களுக்கு எந்தவித கட்டணமும் விதிக்காமல் அவர்கள் இஷ்டம் போல் படம் எடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா?

THE HON. SRI P. KAKKAN : அதுதான் நான் சொன்னேன். பரிசீலனை செய்துதான் பார்க்கவேண்டும்.

Birds sanctuary (near Sathanur dam)

* 1120 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் உள்ள காட்டில் ஒரு பறவை சரணாலயம் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : சாத்தனூரில்கூட வேடந்தாங்கலில் இருக்கும் பறவை விதங்களில் மூன்றுவித பறவைகள் உள்ளன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அங்கேயும் பறவைகள் சரணாலயம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா? இல்லை என்றால் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பறவை இல்லாத கிராமம் இல்லை—நகரமும் இல்லை. அதிலும் தேக்கம் இருக்கும் இடத்தில் பறவைகள் பறந்து கொண்டுதான் இருக்கும். கனம் அங்கத்தினர் பார்த்திருப்பார்கள் வேடந்தாங்கலில் பலவித பறவைகள் இருக்கின்றன. குழந்தைகள் கேட்கிற மாதிரி ஒவ்வொரு இடத்திலும் எங்களுக்குச் சரணாலயம், சரணாலயம் என்று சொல்வது முறையல்ல.

SRI S. NAGARAJA MONIGAR : சாத்தனூரில் பறவைகள் சரணாலயம் மற்றும் படம் பிடிக்க தனியாக கட்டிடம் கட்ட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார். ஏழைகள்

[27th March 1961

பாடுபடும்போது, ஆடம்பரங்கள், ஆடம்பரச் செலவுகள் கூடாது என்று சொல்லுவார்களே, எப்போது இந்த மாதிரி மாறியிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காக்கை குருவி எங்கள் ஜாதி என்ற அபிப்பிராயத்தைத்தான் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, is it not a fact that by human efforts no bird sanctuary could be built by itself? It is only the natural surroundings that could help for such a sanctuary coming up. If so, is it possible for us to construct a bird sanctuary at a place where we like and to tempt even the communists birds from Russia and China to take shelter in our bird sanctuaries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The bird sanctuaries can be organized only in places, as pointed out by the hon. Member, with a natural surrounding where a large number of birds congregate. At Vedantangal a large number and a large variety of birds come.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE* THE FAILURE OF THE GOVERNMENT TO CHECK THE RISE IN PRICES OF FOOD ARTICLES.

DEPUTY SPEAKER : The hon. Member, Sri N. K. Palanisami has given notice of an adjournment motion to discuss the failure of the Government to check the rise in prices of food articles in hotels.

I am asking whether the Hon. Minister is making any statement.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அன்று விலைவாசிபற்றி ஒரு அவசரப் பிரேரணை வந்தபோது தாங்கள் ரூலிங் கொடுத்தீர்கள். இப்போது ஹோட்டலைப்பற்றி முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று நான் நினைக்கிறேன். சென்னை நகரத்தைப் பொருத்த மட்டில் சிவில் சப்ளைஸ் கமிஷனரை நகரத்திலுள்ள ஹோட்டல்காரர்களைக் கூப்பிட்டு விசாரணை செய்து எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம். அதே மாதிரி ஜில்லா தலைநகரங்களைப் பொருத்த மட்டில் கலெக்டர்களை விட்டு ஹோட்டல் சொந்தக்காரர்களைக் கூட்டி விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இன்னும் விவரம் வேண்டுமானால் கனம் அங்கத்தினர் ஒரு அவசரக் கேள்வி போட்டால் இன்னும் விவரங்கள் கொடுக்கலாம். இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.